## 8.63 பேரூராட்சிகள் துறை–பேரூராட்சிகளில் இளநிலை உதவியாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் வரித்தண்டலர், நிலை 1, பணியிடத்தில் பணிபுரிவோருக்கும் நீட்டித்து வழங்க அனுமதித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை

அரசாணை (நிலை) எண்: 211 நாள் : 21.09.1999

படிக்க :

1. அரசாணை (நிலை) எண் 64 ஊ.வ.துறை நாள் 5.2.85
2. அரசாணை (நிலை) எண் 800 ஊ.வ.துறை நாள் 6.12.88
3. அரசாணை (நிலை) எண் 963 ஊரக வளர்ச்சித் துறை நாள் 23.11.90
4. அரசாணை (நிலை) எண் 300 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை நாள் 28.8.92
5. அரசாணை (நிலை) எண் 48 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை நாள் 30.3.98
6. தமிழ்நாடு மாநில பேரூராட்சி வரிவசூலர் பணியாளர்கள் சங்க தலைவர் மூ. பூங்காவனம் கடித நாள் 9.9.98
7. பேரூராட்சிகள் இயக்குநர், கடித எண் 23562/98/அ2 நாள் 8.10.98

**ஆணை**

மேலே 1ல் படிக்கப்பட்ட அரசாணையில் பேரூராட்சிகளில் உள்ள தலைமை எழுத்தர், வருவாய் ஆய்வாளர், இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர் ஆகிய பணியிடங்கள் அரசு நிலையாக்கப்பட்டன. பின்னர் 2ல் படிக்கப்பட்ட அரசாணையில் பேரூராட்சிகளில் உள்ள வரித்தண்டலர் பணியிடமும் அரசு நிலையாக்கப்பட்டது. மேற்படி அரசாணையில் இளநிலை உதவியாளர் பணியிடமும், வரித்தண்டலர் பணியிடமும் ஒன்றுக்கொன்று பரிமாற்றம் செய்து கொள்ளக்கூடிய வகையில் விதிகளுக்கு தக்க திருத்தங்கள் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதன்படி பேரூராட்சிகளில் உள்ள வரித்தண்டலர் நிலை 1 மற்றும் இளநிலை உதவியாளர் பணியிடம், ஒன்றுக்கொன்று மாறுதல் செய்யக்கூடிய பணியிடம் என 4ல் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது. இதையடுத்து அரசாணை (நிலை) எண் 153 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள் 21.6.98ல் தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகளுக்குட்பட்டு தக்க திருத்தங்களும் வெளியிடப்பட்டுள்ளது

2. தமிழ்நாடு மாநில பேரூராட்சி வரிவசூல் பணியாளர்கள் சங்க தலைவர் மேலே 6ல் படிக்கப்பட்ட 9.9.98 நாளிட்ட தனது மனுவில், பேரூராட்சித் துறையில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வு ஆணையத்தால் தேர்வு செய்யப்பட்ட பட்டப்படிப்பு படித்த இளநிலை உதவியாளர்களுக்கு மட்டும் பணியில் சேர்ந்தும் இரண்டு ஊதிய உயர்வுகள் வழங்கி ஊதியம் நிர்ணயம் செய்யப்படுகிறது என்றும் அதேபோன்று ஊரக வளர்ச்சித் துறை கணக்குத் தேர்வில் தேர்ச்சி பெற்ற இளநிலை உதவியாளர்களுக்கு மட்டுமே ஊக்க ஊதிய உயர்வாக ஒரு முன் ஊதிய உயர்வு வழங்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்துள்ளார். ஒரே தேர்வு எழுதி, ஒரே பட்டியலில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் இருந்து நபர்கள் பெறப்பட்டு இளநிலை உதவியாளர் என்றும், வரிவசூலர் என்றும் நியமன அலுவலரால் பணி நியமனம் செய்யும பொழுது வரிவசூலராக நியமனம் செய்யப்பட்டுள்ள பட்டதாரி வரிவசூலருக்கும் இளநிலை உதவியாளருக்கும் வழங்கப்படும் இரண்டு ஊதிய உயர்வுகள் வழங்கி ஊதிய நிர்ணயம் செய்யவும் அதேபோன்று ஊரக வளர்ச்சித் துறை கணக்குத் தேர்வில் தேர்ச்சி பெறும் இளநிலை உதவியாளர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வாக ஒரு முன் ஊதிய உயர்வு வழங்குவதுபோல கணக்குத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ள வரித்தண்டலர்களுக்கும் ஒரு முன் ஊதிய உயர்வு வழங்கும்படி அவர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**3.** பேரூராட்சிகளின் இயக்குநர் தனது கடிதத்தில், இளநிலை உதவியாளர் பணியிடம் வரித்தண்டலர் பணியிடத்தில் இருந்து பதவி உயர்வின் மூலம் செல்லக்கூடிய பணியிடமாக முன்னர் இருந்தது என்றும், ஆனால் தற்போது வரித்தண்டலர் நிலை 1 மற்றும் இளநிலை உதவியாளர் பணியிடம் ஒன்றுக்கொன்று மாறுதல் செய்யக்கூடிய பணியிடம் என அரசு ஆணை நிலை எண் 48 ந.நி.ம.கு.வ.து நாள் 30.3.98ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்றும் எனவே இளநிலை உதவியாளாகளுக்கு வழங்கப்படும் அனைத்து சலுகைகளும் அதாவது பட்டப்படிப்பு பெற்றவர்களுக்கான இரண்டு முன் ஊதிய உயர்வு மற்றும் ஊரக வளர்ச்சி கணக்குத் தேர்வில் தேர்ச்சி பெற்றால் வழங்கப்படும். ஒரு முன் ஊதிய உயர்வு முதல் சில சலுகைகளை பேரூராட்சிகளில் பணியாற்றும் முதல்நிலை வரித்தண்டலர்களுக்கும் நீட்டித்து வழங்கலாம் என பரிந்துரை செய்துள்ளார்.

**4.** தமிழ்நாடு மாநில பேரூராட்சி வரிவசூல் பணியாளர்கள் சங்கத் தலைவரின் கோரிக்கை மற்றும் அதன் மீதான பேரூராட்சிகள் இயக்குநரின் பரிந்துரை ஆகியவற்றை அரசு கவனமுடம் பரிசிலனை செய்தது. அரசாணை (நிலை) எண் 531 நிதித் துறை நாள் 25.4.63ல் அமைச்சுப் பணியில் அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்கள் சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் துறை பகுதி 1 தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு ஒரு முன் ஊதிய உயர்வு (one advance increment) வழங்க ஆணையிட்டுள்ளது. இந்த ஆணையின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் இளநிலை உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர் ஆகியோர் உள்ளாட்சி மன்றப் பணியாளர்களுக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள கணக்குத் துறை தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு ஒரு முன் ஊதிய உயர்வு வழங்க அரசாணை நிலை எண் 2324 ஊ.வ.(ம)உ.து நாள் 9.11.84ல் ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வாணையின் அடிப்படையில் பேரூராட்சிகளில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர்கள் ஊரக வளர்ச்சி கணக்குத் தேர்வில் (panchayat development Account Test) தேர்ச்சி பெற்றவர்களுக்கு ஒரு முன் ஊதிய உயர்வு வழங்கப்பட்டு வருகிறது. தற்போது பேரூராட்சிகளில் உள்ள இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் வரித்தண்டலர் நிலை 1 ஆகிய பணியிடங்கள் அரசு நிலையாக்கப்பட்டுள்ளன. மேலும் 16.12.88 முதல் பேரூராட்சியில் உள்ள வரித்தண்டலர் நிலை 1 பணியிடமும், இளநிலை உதவியாளர் பணியிடமும் ஒனறுக்கு ஒன்று மாற்றக்கூடியவை என அரசு ஆணையிட்டுள்ளது. எனவே பேரூராட்சித் துறையில் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்குரிய அனைத்து சலுகைகளும் வரித்தண்டலர், நிலை 1 பணியிடத்தில் பணிபுரிவோருக்கும் பொருந்தும் எனக் கருதி, தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ் வரும் பேரூராட்சித் துறை இளநிலை உதவியாளர்களுக்கு வழங்கப்படும் அனைத்து சலுகைகளும் அதாவது பட்டப்படிப்பு பெற்றவர்களுக்கான இரண்டு முன் ஊதிய உயர்வு மற்றும் ஊரக வளர்ச்சித் துறை கணக்குத் தேர்வு அல்லது சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் துறை தேர்வு பகுதி 1ல் தேர்ச்சி பெற்றவர்களுக்கு வழங்கப்படும் ஒரு முன் ஊதிய உயர்வு முதலான சலுகைகளை பேரூராட்சிகளில் பணியாற்றும் முதல் நிலை வரித்தண்டலர்களுக்கும் நீட்டித்து வழங்க அனுமதித்து அரசால் ஆணையிடப்படுகிறது. இவ்வாணை பேரூராட்சிகளில் உள்ள வரித்தண்டலர் நிலை 1 மற்றும் இளநிலை உதவியாளர் பணியிடம் ஒன்றுக்கொன்று (interchangeability) பணியிடமாக கொண்டு வரப்பட்ட நாளான 16.12.1988 முதல் நடைமுறைக்கு வருகிறது.

**5.** இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண் 13438/நநிமகுவ/99/1 நாள் 21.4.99 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் அ.சா.கு.எண்.36233/எப்ஆர்4/99/1 நாள் 15.7.99ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சு. மாலதி**
அரசு செயலர்